# திராவிடத்தால் வாழ்கிறோம்

1263

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

70

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# மருத்துவ சேவையும் மக்கள் ஒற்றுமையும் பேசிய கண்ணம்மா!

2005-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக் கதை வசனத்தில் வெளிவந்த திரைப்படம். 1996-ஆம் ஆண்டு முதல் 2005-ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகளில் எவ்விதமான திரைப் பங்களிப்பையும் செய்யாமல் ஒதுங்கி இருந்த கலைஞர், 2005-ஆம் ஆண்டில் 'கண்ணம்மா' திரைப்படத்திற்கு, திரைக்கதை வசனம் எழுதி இருக்கிறார். இந்த பத்தாண்டுக்கால இடைவெளி பற்றி அவரும் உணர்ந்திருந்த காரணத்தால், திரைப்படத்தின் தொடக்கக் காட்சியில், திரையில் தோன்றிப் பேசும்போது, நீண்ட ஒரு இடைவெளிக்குப் பிறகு, நம்மைச் சந்திப்பதாகக் குறிப்பிடுவார்.

ஏன் இந்த இடைவெளி என்ற காரணத்தை மட்டும் அவர் சொல்லவில்லை. இதற்கு முன்பும் இதுபோன்று சில ஆண்டுகள், கதை திரைக்கதை வசனம் எழுதாமல் இருந்த காலத்தில், தயாரிப்பாளராக இருந்துள்ளதைப் பார்க்கிறோம். ஆனால், இந்த (1996-2005) 10 ஆண்டுகள் எவ்வித திரைப் பங்களிப்பும் இல்லாத ஆண்டுகளாக இருக்கின்றன. இந்தப் பத்தாண்டுகளின் முதல் ஐந்து ஆண்டுகள் (1996-2001) முதலமைச்சர் பொறுப்பிலும் பின் ஐந்தாண்டுகளில் (2001-2006) எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

'கண்ணம்மா' திரைப்படம், எளிய ஒரு கதையைக் கருவாகக் கொண்ட திரைப்படம். மருத்துவமனை இல்லாத ஒரு கிராமத்தில் ஏற்படும் உயிரிழப்புகளைச் சிறுவயதில் பார்த்த இரண்டு சிறுவர்கள், வளர்ந்து பெரியவர்களாகித் தங்களது கிராமத்தில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் ஒரு மருத்துவ மனையைக் கட்டித் திறப்புவிழா செய்வதுதான் கதை. இதற்கிடையே நட்பு, பாசம், காதல், மோதல், குடும்பம், தேசம், ராணுவம், போர் எனப் பல்வேறு நிகழ்வுகள் வந்து போகின்றன. இயக்குநர் பாபா விக்ரம் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில், மீனா, பிரேம்குமார், போஸ் வெங்கட், விந்தியா, வடிவுக்கரசி, வாகை சந்திரசேகர், குயிலி, பாலாசிங், வையாபுரி மற்றும் 'கராத்தே' ராஜா ஆகியோர் நடிப்பில் வெளியான திரைப்படமாகும்.

### படத்தின் கதைக்களம்

கண்ணம்மா (மீனா) ஒரு மருத்துவக் கல்லூரி மாணவி, அவளது அன்பான அப்பா, கார்மேகம் (வாகை சந்திரசேகர்). இவர்களின் வீட்டு கார் ஓட்டுநர் பாபு (கராத்தே ராஜா), கண்ணம்மா மீது ஆசைப் படுவதுடன் தகாத முறையில் நடந்து கொள்கிறான். இதனால் கோபம் கொள்ளும் கண்ணம்மா, அவனை 'ஈவ்டீசிங்' வழக்கில் காவல் துறையில் மாட்டிவிடுகிறாள். அதனால், கண்ணம்மாவைப் பழிவாங்க பாபு காத்திருக்கிறான்.

கண்ணம்மா படிக்கும் மருத்துவக் கல்லூரியில், ஆனந்தனும் (பிரேம்குமார்) மாணவராக இருக்கிறார். ஆனந்தனின் உயிர் நண்பன் மதன் (போஸ் வெங்கட்), கிராமத்தில் வசிக்கிறார். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த ஆனந்தனை அவனது நண்பன் மதனும் அவனது தாயார் குயிலம்மாவும் (குயிலி) ஆதரித்து வளர்த்து, டாக்டருக்குப் படிக்கவைக்கின்றனர். மதன் படிக்காமல் கிராமத்தில் விவசாய வேலைகளைச் செய்து வருகிறான். அவனை அவனது மாமன் மகள் மாலா (விந்தியா) காதலிக்கிறாள்.

படங்கள் உதவி : ஞானம்



எல்லைப் பகுதியில் வீசிய பனிப்புயலில் சிக்கி, ஆனந்தன் இறந்துபோனதாகச் செய்தி கிடைத்த அதிர்ச்சியில் கண்ணம்மா மனநலம் பாதிக்கப்படுகிறாள். அவள் தந்தை கார்மேகம், அதிர்ச்சியில் இறந்துவிடுகிறார். யாருமற்று நிற்கும் கண்ணம்மாவைத் தனது வீட்டுக்கு அழைத்துவந்து மதன் பராமரிக்கிறான். இதனால், மாலா கணவனின்மீது கோபம் கொண்டு, தன் தந்தை உலகப்பனின் (பாலாசிங்) தீய யோசனையின் பேரில், கண்ணம்மா மீது காளைமாட்டை ஏவி விட்டு கொல்லப் பார்க்கிறாள். மதன் வந்து தடுத்து, கண்ணம்மாவைக் காப்பாற்றுகிறான்.

கர்ப்பிணியான கண்ணம்மா, மதனின் வீட்டை விட்டுச் சென்று ஒரு கிராமத்துப் பாட்டியின் வீட்டில் தஞ்சமடைகிறாள். அங்கு, அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. பிரசவத்தின்போது, அவளுக்கு மனநலம் தெளிகிறது. மீண்டும் மதனுடைய வீட்டுக்கு வருகிறாள். பாபு, வடிவு (வடிவுக்கரசி), உலகப்பன், மாலா அனைவரும் ஒன்று சேர்ந்து பஞ்சாயத்தைக் கூட்டி, கண்ணம்மாவின் குழந்தைக்கு பாபுதான் தந்தை. எனவே, அவனுடன் கண்ணம்மா சென்று வாழ வேண்டும் என்று தீர்ப்பு சொல்கின்றனர்.

பனிப்புயலில் சிக்கி இறந்துபோனதாகக் கருதப்பட்ட ஆனந்தன், அந்நிய நாட்டுச் சிறையில் இருந்து விடுதலையாகி, இப்போது திரும்பி வருகிறான். மதனும் வருகிறான். இருவரும் சேர்ந்து தீயவர்களான பாபு, உலகப்பன் ஆகியோரை உதைத்து, காவல் துறையிடம் ஒப்படைக்கின்றனர். இறுதியில்,

கண்ணம்மாவினால் காவல் துறையில் சிக்கிய பாபு, கண்ணம் மாவைப் பழிவாங்குவதற்காக அவள்மீது ஆசிட் முட்டையை வீசுகிறான். அதனைத் தனது முதுகில் தாங்கி, கண்ணம்மாவை ஆனந்தன் காப்பாற்றுகிறான். இதனால், கண்ணம்மாவுக்கும் ஆனந்தனுக்கும் இடையே காதல் மலர்கிறது.



மதன் உதவியுடன் பெற்றோரைச் சம்மதிக்கவைத்து, ஆனந்தனும் கண்ணம்மாவும் திருமணம் செய்து கொள்கின்றனர். அதேபோல மதனுக்கும் மாலாவுக்கும் திருமணம் நடக்கிறது. இதற்கிடையே கார்கில் போரில் ஈடுபடும் இராணுவ வீரர்களுக்கு, மருத்துவம் பார்க்கும் வேலைக்கு ஆனந்தன் விருப்பப்பட்டுச் செல்கிறான்.



> **மதன் உதவியுடன் பெற்றோரைச் சம்மதிக்கவைத்து, ஆனந்தனும் கண்ணம்மாவும் திருமணம் செய்து கொள்கின்றனர்.**

கிராமத்தில் அண்ணல் அம்பேத்கர் பெயரில் இலவச மருத்துவமனையைத் திறப்பதுடன் படம் நிறைவடைகிறது.

### இந்து - முஸ்லிம் ஒற்றுமை

சிறிய இந்தக் கதையில் காட்சிக்குக் காட்சி, கலைஞர் தனது அரசியலை வசனங்களாக எழுதி, கதாபாத்திரங்களைப் பேசவைத்துள்ளார். சாதி, மதம், மொழி, பண்பாடு என அனைத்தையும் பற்றிய தனது கருத்துகளை எழுதி இருப்பார். மேலும், 2005-ஆம் ஆண்டுகாலச் சூழ்நிலையை ஒட்டி, இந்துத்துவப் பாசிச அரசியலுக்கு எதிராக, இந்து முஸ்லிம் ஒற்றுமை, இஸ்லாமியரின் தேசப்பற்று, ராணுவ சேவை பற்றிய காட்சிகளையும் இணைத்திருப்பார்.

அதாவது, இஸ்லாமியரைத் தீவிரவாதிகளாக, இந்திய நாட்டின் நலனுக்கு எதிரானவர்களாகப் பெரும்பாலான தமிழ் சினிமாக்கள் காட்சிப் படுத்திக்கொண்டிருந்த காலகட்டத்தில் கலைஞர், 'இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டம் தொடங்கி, எல்லைப் பாதுகாப்பு வரை அனைத்திலும் இஸ்லாமியருக்குப் பங்கு உண்டு என்பதையும் தேசப்பற்றில் இஸ்லாமியர் எவருக்கும் குறைந்தவர்கள் இல்லை' என்று திரைக்கதையும் வசனமும் எழுதினார்.

எடுத்துக்காட்டாக, இராணுவ முகாமில் சிவகங்கையைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் அப்துல்லாவின் மகன் இப்ராகிம் கார்கில் போரில், இந்தியாவின் வெற்றிக்குப் பாடுபடுவதாகவும் மருத்துவர் ஆனந்தனைச் சந்தித்து உரையாடுவதாகவும், ஒரு காட்சியைக் கலைஞர் கொண்டுவந்திருப்பார். சமூகத்தில் மேலோங்கும் மக்கள் விரோத (மதவாத) அரசியலுக்குக் கலைவடிவில் பதிலடி கொடுப்பது என்ற தனது பணியினைக் கால மாற்றங்களுக்குப் பின்னரும் 'கண்ணம்மா' திரைப்படத்தின் மூலமும் செய்தார் கலைஞர்.

...காட்சி விரியும்

---

## மின் கட்டணம் உயர்த்தப்பட்டதா?




தமிழ்நாட்டில், பல நகரங்களில் மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டிவருகின்றனர். ஏற்கெனவே, மின் வெட்டுப் பிரச்சினையில், மக்கள் அல்லாடிக்கொண்டிருக்கும் நிலையில், மேலும் பெரிய சுமையாக அறிவிக்கப்படாத மின்கட்டண உயர்வால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மின்சாரக் கட்டண நிர்ணயம் தொடர்பாக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சார்பில், கருத்துகள் கேட்கப்பட்ட நிலையில், தற்போது மின்கட்டணம் தொடர்பாக, எந்த அறிவிப்பும் இல்லாமல் மின்சாரம் உயர்த்தப்பட்டுள்ளதா என மக்கள் சந்தேகங்களை எழுப்பிவருகின்றனர்.

குறிப்பாக, த.வெ.க. அரசு அறிவித்த மின்கட்டணச் சலுகையில், 500 யூனிட்டுகளுக்கு மேல் ஒரு யூனிட் கூடினாலும் (உதாரணமாக 501 யூனிட்), மொத்த யூனிட்களுக்கும் மிக அதிக கட்டணம் வசூலிக்கப்படும் எனக் கூறப்பட்டது. இந்த நிலையில், கோடைக்கால கூடுதல் நுகர்வின் காரணமாக 500 யூனிட்டைத் தாண்டும்போது, பொதுமக்கள் பெரிய தொகையைச் செலுத்தவேண்டியுள்ளது. கழக ஆட்சியில், எவ்வளவு யூனிட் பயன்படுத்தினாலும் 100 யூனிட் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு, மின் கட்டணம் கணக்கிடப்பட்டு வந்தது.

புதிய அரசு, 'சலுகை அளிக்கிறேன்' என்கிற பெயரில் கட்டணக் கொள்ளையைத் தொடங்கிவிட்டதாக மக்கள் கொந்தளித்துள்ளனர். இது தொடர்பாக, மின்வாரியமோ அதிகாரிகளோ உரிய விளக்கங்கள் அளிக்காத நிலையில், அறிவிக்கப்படாத வகையில் உயர்த்தப்பட்ட மின்கட்டணம், பெரும் சுமையாக மாறியுள்ளது. மாற்றம் ஏமாற்றமானதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்



### மணவிழாவுக்குத் தலைவரை அழைத்தோம்!



ர.சரவணன்

2015-ஆம் ஆண்டில், எனது மணவிழா அழைப்பிதழை அளிக்க, என் அப்பா து.ரவி, அம்மா ர.ஷகிலா ஆகியோருடன், அப்போதைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவரைக் காணச் சென்றிருந்தோம். என் அப்பா மறைந்த ரவி அவர்கள், கோடம்பாக்கத்தில் கழகப் பணியாற்றி வந்தவர். மணவிழா நாளில், தலைவர் வெளியூர் சென்றிருந்த நிலையில், மறக்காமல் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். எனக்கு முதல் குழந்தை பிறந்தபோது, குழந்தைக்குப் பெயர் சூட்டியதும் தலைவர் அவர்கள்தான். மூன்று தலைமுறையாகக் கழக உணர்வோடு செயல்பட்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

– ர.சரவணன், கோடம்பாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

### 1959-ஆம் ஆண்டு சென்னை மாநகர மன்றத் தேர்தல்!

1959-ஆம் ஆண்டில், திருத்தப்பட்ட முனிசிபல் சட்டத்தின்படி, சென்னை மாநகராட்சி மன்றம் 100 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது. ஒவ்வொரு வட்டமும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தல், வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது. கழகத்தின் சார்பில், பேரறிஞர் அண்ணா, கலைஞர், ஆசைத்தம்பி, அன்பழகன், சத்தியவாணி முத்து, எஸ்.எஸ்.ராமச்சந்திரன், கே.ஆர். ராமசாமி உள்ளிட்ட தலைவர்கள், தினமும் நான்கு கூட்டங்களுக்கு மேல் கலந்துகொண்டு மக்களிடம் ஆதரவு திரட்டினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900